கற்பகம்
KATPAKAM
திங்கள் இதழ்
விலை ரூபா 10/-

மலர்-01 ஒக்டோபர்-2008 இதழ்-12

## குறளமுதம்-12

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதைத் தரும்.

அதிகாரம்-2 - அறத்துப்பால் - வான் சிறப்பு

"துப்பார்க்குத் துப்பு ஆய துப்பு ஆக்கித் துப்பார்க்குத் துப்புஆய தூஉம் மழை"

உண்பவர்க்கு ஊட்டம் தரும் உணவுப் பொருட்களை விளைவித்துத் தருவதோடு, (உண்பவர்க்கு) தானும் ஒரு உணவாக அமைவது மழை.

### பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்கள்

# பழமையோடு புதுமை புகுத்தி நிறைவுகாண உழைக்க வேண்டும்!

**-மேல்நீதிமன்ற நீதிபதி வேண்டுகோள்-**



எமது இயற்கை வளமான பனை வளத்தை முழுமையாக பயன்படுத்தி கள் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதன் மூலம் எமது பொருளாதாரத்தைக் கட்டி வளர்ப்பதற்கும் பனை வளத்தின் மூலமான சட்டவிரோத செயற்பாடுகளையும் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவரலாம் என்று யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா குறிப்பிட்டார்.

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அண்மையில் நடத்திய பரிசளிப்பு விழாவிற்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசத் தலைவர் சி.சந்திரலிங்கம் அவர்கள் தலைமையில் சமாச மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கூட்டுறவு என்ற சொற்றொடர் பல நாடுகளில் பயன்பட்டாலும் எமது நாட்டில் அது தமிழ் மக்களின் வாழ்க்கையுடன் ஊறிய ஒன்றாகக் காணப்படுகிறது.

கூட்டுறவுத் துறையிலுள்ள பெரும்பாலானோர் கிராமங்களைச் சேர்ந்தவர்கள். எமது யாழ்.குடாநாடும் கிராமங்களையே அதிகளவு கொண்டுள்ளது. இக்கிராமங்களில் கடந்த 20,30 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மக்கள் கூட்டுறவு வாழ்க்கையை எவ்வாறு நடைமுறையில் வாழ்ந்தார்களென்பதை அனைவரும் சிந்தித்து பார்க்கவேண்டும்.

பொருளாதாரத்தில் பனை மற்றும் தென்னை வளங்கள் முக்கியம் பெற்றிருந்தன. பனையிலிருந்து அவர்கள் கள் மட்டும் பெற்றுக்கொள்ளவில்லை. அதிலிருந்து பல பொருளாதாரப் பொருட்களைத் தயாரித்தார்கள். 1972ம் ஆண்டுக்குப் பின்னர் உலகச் சந்தையில் சீனியின் விலை அதிகரித்தபோது பனங்களில் இருந்து சீனியைத் தயாரித்தார்கள்.

அன்றைய காலத்தில் இருந்த பொருளாதார முறைகளில் இன்று இருக்கின்ற விஞ்ஞான முறைகளைப் புகுத்தினால் எமது பொருளாதாரத்தில் நாம் சிறந்த முன்னேற்றத்தை அடையலாம்.

இன்றைய விஞ்ஞான யுகத்தில் கண்டுபிடிப்புக்கள் வளர்ந்தாலும் யதார்த்தத்தை எவரும் மாற்ற முடியாது.யாழ்.குடாநாட்டைப் பொறுத தவரை நகரங்கள் விஞ்ஞான வளர்ச்சியில் சங்கமிக்கலாம். ஆனால் கிராமங்களிலுள்ள வளங்களை அடிப்படையாகக் கொண்டே எமது வாழ்வியல் செயற்பட வேண்டுமென்று மேல்நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா தெரிவித்தார்.

எமது முதியவர்களிடத்தே இருந்த கூட்டுறவு பற்றிய அறிவு இளம் பராயத்தினரிடையே புகுத்தப்படவேண்டும். அவர்களுக்கு சுயபொருளாதார முறை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

(2ம் பக்கம் பார்க்க)










"கணக்கிலா பயன்தரு கற்பகதருபோல் கற்பகமும் பயன் தரும்"

**சிந்தனைத்துளி**

*"சுயநலமின்றி வேலை செய்யக்கூடிய தகுதி வாய்ந்த ஒருவன் மேலான மனவலிமை பெற்றவனாக விளங்குகிறான்."* —சுவாமி விவேகானந்தர்—

## கற்பகக்கரு

## முன்மாதியான முன்பள்ளிகள்!

யாழ். மாவட்டத்திலுள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் சுமார் 200ற்கு மேற்பட்ட முன்பள்ளிகளை தங்கள் தங்கள் பிரதேசங்களில் நடத்தி வருவது பாராட்டுக்குரிய விடயமாகும்.

பாடசாலைகளில் ஆரம்பக் கல்வியை பெறுவதற்குமுன் முதலில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை முன்பள்ளிகளுக்கே அனுப்பி வருகிறார்கள். தங்கள் பிள்ளைகளுக்கு மூன்று வயது நிரம்பியதும் தங்கள் பகுதிகளிலுள்ள முன்பள்ளிகளில் சேர்த்துவிடுகிறார்கள். இம் முன்பள்ளிகளில் ஆசிரியர்களாக கடமைபுரிபவர்கள் சங்கங்களின் மகளிர் குழுக்களைச் சேர்ந்த உறுப்பினர்களே ஆகும். இவர்களுக்கு தகுந்த பயிற்சிகள் சங்க மட்டம், கொத்தணி மட்டம், சமாச மட்டங்களில் துறைசார் அனுபவம் பெற்ற விரிவுரையாளர்களைக் கொண்டு வழங்கப்பட்டு வருகிறது.

முன்பள்ளிகளில் கல்வி கற்க வரும் பல்வேறு தரப்பட்ட பிள்ளைகளை ஆசிரியர்கள் அன்புடன் அரவணைத்து அவர்களுக்கேற்றவாறு அவரவர் வழிக்குச் சென்று பயிற்சியளித்து அவர்களை ஆரம்பப் பாடசாலைகளில் தரம் 1 வகுப்பிற்கு அனுப்பி வைக்கிறார்கள். இப்பிள்ளைகள் முன்பள்ளி பயிற்சி காலத்தில் கல்வியை கற்றுத் தேர்ந்து ஆளுமை மிக்கவர்களாகவே ஆரம்பப் பள்ளிகளுக்கு செல்கிறார்கள்.

இம் முன்பள்ளிகளில் முக்கியமாக இவர்களுக்கு ஒழுக்கம், நடத்தை என்பனவற்றில் தகுந்த பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

சுமார் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட சிறார்களுக்கு பயிற்சியின்போது அவர்களுக்கு வேண்டிய சத்துணவுகள், சீருடை, விளையாட்டு உபகரணங்கள், பாடசாலை உபகரணங்கள் போன்றவற்றை இப்பள்ளிகளை நடத்தி வருகின்ற கூட்டுறவு நிறுவனங்களே பொறுப்பேற்று இலவசமாக வழங்கி வருகின்றன.

வறுமைக்கோட்டின் எல்லையிலிருந்து செல்லும் பெரும்பாலான தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு இவ் உதவி ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. இதற்கான செலவுகளை குறிப்பிட்ட சங்கங்கள் அங்கத்தவர்களின் உழைப்பிலிருந்து ஒரு தொகையை கல்வி நிதிக்காக வழங்கி வருகின்றன. இந்நிதியிலிருந்து சுமார் 200ற்கும் மேற்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்த ஊக்குவிப்புத் தொகையாக ஆயிரம் ரூபாவுக்கும் இரண்டாயிரம் ரூபாவுக்கும் இடைப்பட்ட தொகையை சங்கங்கள் தத்தம் நிதி வலுவுக்கேற்ப வழங்கி வருவதுடன் இலவச சீருடைகளையும் வழங்கி வருகின்றன.

அங்கத்தவர்களின் உழைப்பின் மூலம் பெறப்படும் ஒரு தொகையிலிருந்து அங்கத்தவர்களுக்கும் அவர்தம் பிள்ளைகளுக்கும் ஒரு கூட்டுறவு நிறுவனம் இலவசமாக பல்வேறு உதவிகளை செய்து வருகிறதென்றால் அப்பெருமை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களையே சாரும். பல்வேறு வகையான கூட்டுறவு நிறுவனங்கள் இம் மாவட்டத்தில் செயற்பட்டு வருகின்றபோதும் பிறரது உதவிகளை எதிர்பாராமல் தமது சொந்தக் காலில் நின்று தமது உழைப்பின் மூலம் தமது வருங்கால சந்ததியினருக்கு வாழ்வாதார கல்வி வசதிகளை ஏற்படுத்தி வரும் ஒரு நிறுவனம் மாவட்டத்தில் இயங்கி வருகிறதென்றால் அந்நிறுவனம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களே என்று பெருமையுடன் ஏற்றுக்கொள்வதில் ஒவ்வொரு அங்கத்தவனும் புளகாங்கிதம் அடைகின்றான்.

இந்நிறுவனங்களின் இத்தகைய செயற்பாடு ஏனைய கூட்டுறவு நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு முன்மாதிரியாக அமைந்துள்ளதென குறிப்பிடலாம்.

"அங்கத்தவர்களின் ஆதரவே சங்கத்தின் பலம்"

—ஆசிரியர்—

# பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்

# கிளை நிர்வாக நடைமுறை விதிகள்

**8.2.** கிளை நிர்வாக அங்கத்தவரை தெரிவு செய்து அவரை தகுதியற்றவர் என்று காணுமிடத்து அப்பதவியிலிருந்து இடைவிலக்கல் அல்லது நீக்கல்.

**8.3.** கிளை நிர்வாக சபை அறிகைகளையும் சிபார்சுகளையும் பற்றி சிபார்சு செய்தல்.

**8.4.** உபசபைகளை உருவாக்கி சிறுகைத்தொழில், மதுசார, பதநீர் உற்பத்தி, கல்வி, பண்பாடு, சுகாதார நடவடிக்கைகளைக் கண்காணித்தல்.

**8.5.** அங்கத்தவர் கடன் எல்லையைப் பரிந்துரைத்தல்.

**8.6.** கிளையில் முறையாக அங்கத்துவம் பெற்று 3 மாத காலத்தைப் பூர்த்தி செய்த ஒவ்வொரு அங்கத்தவருக்கும் பொதுச்சபைகளில் பங்குகொண்டு வாக்களிக்கும் தகுதி உண்டு.

**8.7.** காலத்திற்கு காலம் கிளை நிர்வாகத்தின் உதவியுடன் அங்கத்தவர் பங்களிப்பு, முன்னேற்றம் பற்றி மீளாய்வு செய்து அவர்களது தரக் கணிப்புப் பற்றிய நிர்ணயங்களை செய்தல்.

**8.8.** கிளை ரீதியான அபிவிருத்திக்கு நிதிப்பகிர்வு செய்வது சம்பந்தமான பொதுக் கொள்கைகள் ரீதியில் தீர்மானங்கள் இயற்றி கிளை நிர்வாகத்தினூடா தாய்ச்சங்கத்திற்கு விண்ணப்பித்தல்.

### 9. பொதுக் கூட்டக் குறிப்புக்கள்:

நிகழ்ச்சி நிரலின்படி சங்க உபவிதி 22ற்கு அமைவாக தயாரித்து நடைமுறைப்படுத்தப்படலாம்.

### 10. கிளை நிர்வாக சபைக்கு உறுப்பினர் தகுதி:

**10.1.** நிர்வாக குழுவிற்கு தெரிவு செய்யப்படும் உறுப்பினர் குறைந்தது ஒரு வருடமாவது கிளை அங்கத்துவத்தை பூர்த்தி செய்த தகுதியை கொண்டிருத்தல் வேண்டும்.

**10.2.** இச்சங்கத்தின் நடவடிக்கையின் கீழோ அல்லது வேறு வகையிலோ ஒழுக்கமீறல் காரணமாக கடந்த மூன்று வருடத்திற்குள் தண்டனைக்கு உட்படுத்தப்படாதவர்.

**10.3.** சங்கத்தில் வகுக்கப்பட்டு கடைப்பிடிக்கப்படும் ஒழுங்கிற்கு அமைய உற்பத்திப் பங்களிப்பை ஆதாரமாக வைத்து வகைப்படுத்தும்போது அ, ஆ தரத்தின் கீழ் அடங்கும் அங்கத்தவர்.

**10.4.** கிளைக்குழு தெரிவின்போது 21 வயது நிரம்பியவர்.

**10.5.** இச்சங்கத்திலோ அல்லது வேறு பதிவு பெற்ற கூட்டுறவுச் சங்கத்திலோ ஏதாவது கடன் அன்றி வேறு நிலுவைகளை கொண்டிருக்காதவர்.

-வளரும்-

## புதுமையும் பழமையும்......

1ம் பக்கத் தொடர்ச்சி

இவர்களுக்கு தண்டம் விதிப்பதன் மூலம் இதனைத் தடைசெய்யலாமென்றில்லை. இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளைவிட பல சந்தர்ப்பங்களில் அப்பாவிகளே மாட்டிக் கொள்கின்றனர்.

கசிப்பு உற்பத்தியை தடை செய்ய வேண்டுமாயின் கிராம மட்டங்களில் இளைஞர் யுவதிகளை உள்ளடக்கிய விழிப்புக்குழுக்கள் அமைக்கப்பட வேண்டும்.

ஆண்டவன் வழங்கிய அறிவைப் பயன்படுத்திச் சிந்தித்துச் செயற்படும்போது, எங்கள் முன் இருக்கின்ற பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும் என்றார்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் இங்கு பேசுகையில்,

கல்வியிலே திறமை பெற்றவர்கள், சாதனைகளைப் புரிந்தவர்கள் எங்கே இருந்தாலும் பாராட்டப்படுவார்கள். அவர்களைத்தேடி பலர் வருவார்கள். அவர்களுடைய சாதனைகள் வரலாற்றில் பொறிக்கப்படக்கூடியதாக இருக்கும்.

வடமாகாணப் ப.தெ.வ.அ.கூ.ச. சமாசம் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைகின்ற அங்கத்தவர், பணியாளர்களுடைய பிள்ளைகளை வருடா வருடம் பாராட்டிக் கௌரவித்து வருகின்றது. இதனைவிடவும் பல செயற்திட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றது.

பணியாளர்கள் மற்றும் அங்கத்தவர்கள் ஓய்வுபெற்றால் அவர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்கின்ற செயற்பாடு முன்னர் இருந்ததில்லை. ஆனால் எங்களுடைய சமாசம் இன்று அதனை நடைமுறைப்படுத்துகின்றது. ஓய்வூதியத் தொகை குறைவானதாக இருக்கலாம், ஆனால் கஷ்டமான விதத்திலே தொழில் செய்த தங்களுக்கு உழைப்புக்கேற்ற வகையில் இறுதிக் காலத்தில் சமாசம் இந்த ஓய்வூதியத்தை வழங்குகின்றதென நினைக்கும்போது அவர்கள் மகிழ்வடைவார்கள்.

கிராம மட்டங்களில் மேற்கொள்ளப்படுகின்ற கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் எமது சங்கங்களினுடைய அபிவிருத்திக்குத் தடையாக இருக்கின்றன. இச் செயற்பாட்டை நிறுத்துவதற்கு நீங்கள் அனைவரும் முன்வர வேண்டும் என்று தெரிவித்தார்.

## மண்வளமும் பனை வெல்லத்தின் தரமும்

சிவா



(முற்றொடர்)

01. அதாவது, தொழிற்சாலை அடிப்படையிலோ அல்லது குடிசைக் கைத்தொழிலாகவோ உற்பத்தி செய்யப்படும்போது பதநீரை முதலில் சுத்தமான வடி துணியால் அல்லது வடி தட்டினால் வடிகட்டி விட வேண்டும். இதனால் பதநீரில் உள்ள தூசி, துரும்பு; மற்றும் கழிவுப் பொருட்களினை அகற்ற முடியும். தவறப்படும் இடத்து வெல்லத்துடன் தூசிகள், துரும்புகள் சேர்ந்து விடுவதால் வெல்லத்தின் தரம் குறைவடைந்துவிடும்.

2.பதநீர் காய்ச்சப்படும்போது கூரையிலிருந்து தூசி, கரி, சாம்பல் என்பன சிதறி விழாமல் பார்த்துக் கொள்ளல் வேண்டும். காற்றினால் அள்ளுண்டுவரும் தூசிகளும் கலக்காது பார்த்துக்கொள்ளல் அவசியம்.

3. பதநீர் பதப்படுத்துவதற்கான சகல பாத்திரங்களையும் சுத்தமான நீரில் கழுவிப் பயன்படுத்த வேண்டும்.

4.பதநீர் வற்றிப் பாணியாக வரும்பொழுது காற்றினால் மண், சாம்பல்கள் விசிறப்படுவதிலிருந்து தவிர்த்துக்கொள்ளல் மிக அவசியம். ஏனெனில் இந்நிலையில் கலக்கும் கழிவுகளை அகற்றுவதென்பது மிகக் கடினமானது.

5.பதநீர் காய்ச்சும் இடம் துப்புரவானதாகவும், காற்றின் தாக்கம் குறைவாக இருக்கும் வகையில் அடைப்புக்களைக் கொண்டதாகவும் இருப்பதுடன், அகப்பைகள், குவளைகள் வைக்கும் வகையில் நிலத்தின் மேல் பாய் அல்லது விரிப்பு விரித்து அதற்கு மேல் வைத்து பயன்படுத்த வேண்டும்.

6. வெல்லம் அச்சிடும்போதோ அல்லது ஓலைக்குட்டான்களில் இடப்படும்போதோ தூய்மையாக மேற்கொள்ளப்பட வேண்டும். அச்சுகள் யாவும் நன்றாக கழுவப்பட்டு காய வைத்து பின் பாவிக்க வேண்டும்.ஓலைக்குட்டான்களாயின் தூசிகள் படிந்திருக்கும் இவற்றை நன்கு துப்புரவாக்கிய பின் வெல்லமிடப்பட வேண்டும்.

7. வெல்லம் அச்சிட்ட பின்பு அல்லது குட்டான்களில் போடப்பட்ட பின்பு துணியினால் உடன் மூடிவிட வேண்டும்.

(வளரும்)

---


## பல்துறையில் தடம்பதித்த கூட்டுறவாளர்!

வலி. தெற்கு பிரதேச செயலகத்தின் கலாச்சாரப் பேரவையினால் தமது பிரதேசத்தின் கலைத் துறையின் மேம்பாட்டிற்கு ஆற்றிய சேவைக்காக வழங்கப்படுகின்ற "ஞான ஏந்தல்-2008" விருதினைப் பெற்றிருக்கும் தியேட்டர் வீதி, இணுவிலை சேர்ந்த இளையதம்பி செல்வரத்தினம் அவர்களின் கலைச் சேவைக்கு கிடைத்த கௌரவமாக இதனைக் கருதலாம்.

1972ம் ஆண்டு கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் தன்னை ஒரு அங்கத்தவராக இணைத்துத் தொடர்ந்து தனது செயற்பாட்டின் மூலம் அனைத்து அங்கத்தவர்களின் மதிப்பினைப் பெற்று, அச்சங்கத்தின் தலைவராக பதவி வகித்தது மட்டுமல்லாமல், தனது கிராமம் முன்னேற வேண்டும் என்ற எண்ணத்தோடு தனது கிராமத்தில் கலாஜோதி சனசமூக நிலையத்தை உருவாக்கியதுடன், அந்த சனசமூக நிலையத்தினூடாக கலையினை வளர்க்க வேண்டும் என்ற அவாக் கொண்டு இளைஞர்கள் மட்டத்தில் நாடக மன்றத்தினை உருவாக்கி அதற்கும் தானே தலைமைதாங்கி சிறந்த நடிகர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர்.

இவர் சிறு வயதிலிருந்தே கலையில் அவாக் கொண்டவர். பல நாடகங்களை மேடையேற்றி மக்கள் மத்தியில் ஒரு நன்மதிப்பைப் பெற்றவர். அவரது நடை, உடை, பாவனை எல்லாம் ஒரு கலையம்சம் பொருந்திய ஒரு நடிகனாக அவருக்கு அழகு சேர்த்தது. இவர் தனது இளமைக் காலத்தில் இந்தியா சென்று அங்கு தமிழ் அறிஞர்களிடம் முறைப்படி திருக்குறள், அதன் பொழிப்புக்கள், தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்று ஒரு சிறந்த மேடைப் பேச்சாளராகவும் திகழ்பவர். அதுமட்டுமல்லாது வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசத்தின் தலை வராக பதவி ஏற்று சமாசத்தின் அச்சியந்திரம் கொள்வனவு செய்து, அதனை நிறுவி ஆரம்பித்து வைத்த வரும் இவரே. அத்தோடு தனது கூட்டுறவுச் சேவையினை நிறுத்தாது தொடர்ந்து வலிகாமம் கொத்தணியின் தலைவராக பதவி ஏற்று அதன் வளர்ச்சிக்காகவும் பாடுபட்ட உண்மையான ஒரு கூட்டுறவாளர் ஆவார்.

இவர் வலி.தெற்கு பிரதேச செயலக கலாச்சார பேரவை வழங்கும் ஞான ஏந்தல் விருது-2008 பெற்றமையானது கூட்டுறவாளர் என்ற வகையில் நாம் எல்லோரும் பெருமைப்படக்கூடியதே. இந்த விருது அவர் பல்துறையில் ஆற்றிய சேவைக்காக வழங்கப்பட்டுள்ளமை பொருத்தப்பாடுடையதே, ஏனெனில் இவர் பல்துறைகளிலும் ஈடுபாடுடையவராக திகழ்ந்தமையே. தான் கலந்து கொள்ளும் எந்த நிகழ்வானாலும் அதற்கு ஏற்ப பொருத்தமான திருக்குறளையும் பொருளையும் உரைப்பதுடன், சிறுகதைகள் மூலம் குறித்த அந்நிகழ்வின் முக்கியத்துவத்தை உணர்த்தி, பலரது பாராட்டுதல்களையும் பெற்ற சிறந்த ஒரு பேச்சாளர்.



இவர் தான் பணிபுரியும் பணியாளர்களுடன் மிகவும் அன்பாக, உண்மையான தலைமைத்துவ பண்புடன் நடந்துகொள்ளும் பண்பாளனாக திகழ்ந்தவர். இப்படிப்பட்ட, பல்துறையிலும் சிறந்த ஒரு கூட்டுறவாளனுக்கு வழங்கப்பட்ட இந்த விருது மிகவும் பொருத்தமானதே என்பதுடன், தொடர்ந்தும் இவர் பல விருதுகளைப் பெற்று, சிறந்த உடல், உள நலத்துடன் நீடூழி வாழ வேண்டும் என கற்பகம் வேண்டுவதுடன், அவரை வாழ்த்தியும் நிற்கிறது.

---

**பழங்களின் பிறப்பிடம் :-**

- திராட்சைப்பழம் –கஸ்பியன் கற்பகுதி
- அன்னாசிப் பழம் –பிரேசில்
- வாழைப்பழம் –தென்கிழக்காசியா
- பப்பாசி –மெக்சிக்கோ
- தோடை –இந்தியா

# (ஓ)நாயும் பூனையும்



"முன்னொரு காலத்தில் ஒரு குடியானவன் இருந்தான். அவனிடம் ஒரு நாய் இருந்தது. இளம் வயதில் இந்த நாய் எஜமானன் வீட்டுக்கு காவலாய் இருந்தது. ஆனால் கிழடாகியதும் எஜமானன் அதை வெளியே விரட்டியடித்து விட்டான். அது ஸ்தெப்பி வெளியில் அலைந்து சுண்டெலியையும் அங்கே கிடைத்த வேறு சிறு பிராணிகளையும் பிடித்துத் தின்று வந்தது.

ஒரு நாள் இந்த நாய் தன்னிடம் ஒரு ஓநாய் வரக் கண்டது.

"நாயே, என்ன சேதி?" என்று விசாரித்தது ஓநாய்.

நாய் தக்க மரியாதையுடன் பதிலளித்தது.

"எங்கே போகிறாய்?" என்று கேட்டது ஓநாய்.

"என்னுடைய இளம் வயதில் என் எஜமானன் என்னிடம் மிகவும் பிரியமாய் இருந்தான், ஏனெனில் அப்பொழுது அவன் வீட்டுக்கு காவலாய் இருந்தேன். பிறகு நான் கிழடாகியதும் என்னை விரட்டியடித்துவிட்டான்" என்று நாய் விளக்கமாகக் கூறியது.

"உனக்கு ரொம்பப் பசியாயிருக்குமே?" என்றது ஓநாய்.

"ஆம், பசியாய்த்தான் இருக்கிறது" என்று பதிலளித்தது நாய்.

"அப்படியானால் நீ என்னுடன் வா, உனக்கு ஆகாரம் தேடித் தருகிறேன்"

ஆகவே நாய் ஓநாயுடன் சென்றது. ஸ்தெப்பி வழியே இரண்டும் போய்க் கொண்டிருந்தன. அப்பொழுது ஆட்டு மந்தை ஒன்று மேய்வதைக் கண்ட ஓநாய், "அங்கே மேய்ந்து கொண்டிருப்பவை எப்படிப்பட்ட பிராணிகள் என்று பார்த்துவிட்டு வா."

நாய் போய்ப் பார்த்துவிட்டு வேகமாய் ஓடி வந்தது.

"அவை ஆடுகள்" என்றது.

"நாசமாய்ப் போக! அவற்றைப் பிடித்துத் தின்றோமேயானால் பல் எல்லாம் ரோமம் ஒட்டிக் கொள்ளுமே தவிர, வயிறு நிறையவே நிறையாது. இவை வேண்டாம், இன்னும் போய்ப் பார்ப்போம் வா!"

ஆகவே இரண்டும் தொடர்ந்து நடந்தன. பிறகு ஓநாய் அங்கே ஸ்தெப்பியில் வாத்துக்கள் திரளாய் இருப்பதைக் கண்டது.

"அங்கே பசுந் தளிர்களுக்கிடையே மேயும் அவை என்ன என்று போய்ப் பார்த்து விட்டு வா!" என்று அது நாயிடம் சொல்லிற்று.

நாய் அங்கே போய்ப் பார்த்துவிட்டுத் திரும்பி ஓடி வந்தது.

"அவை வாத்துக்கள்" என்றது.

"நாசமாய்ப்போக! அவற்றைப் பிடித்துத் தின்றோமேயானால் பல் எல்லாம் இறகுகள் ஒட்டிக் கொள்ளுமே தவிர, வயிறு நிறையவே நிறையாது. இவை வேண்டாம், இன்னும் போய்ப்பார்ப்போம் வா!"

ஆகவே இரண்டும் தொடர்ந்து நடந்தன. அங்கு ஒரு குதிரை மேய்வதை ஓநாய் கண்டது.

"அங்கே புல் மேயும் அந்தப் பிராணி என்னவென்று போய்ப் பார்த்துவிட்டு வா" என்றது.

நாய் அங்கே போய்ப் பார்த்துவிட்டுத் திரும்பி ஓடி வந்தது.

"அது ஒரு குதிரை" என்றது.

"சரி இது இனி நம்முடையதுதான்" என்றது ஓநாய்.

இரண்டும் குதிரையை நோக்கி ஓடின. ஓநாய் தரையைப் பிறாண்டியது, பற்களை நறநறவெனக் கடித்துக் கோபத்தை வரவழைத்துக் கொண்டது.

பிறகு நாயிடம் "எனக்கு வால் துடிக்கிறதா, பார்" என்று கேட்டது.

நாய் பார்த்துவிட்டு "மெய்தான், துடிக்கிறது" என்றது.

"இப்பொழுது என் கண்கள் பிதுங்கி வெளியே வந்திருக்கின்றனவா, பார்" என்று கேட்டது.

"ஆம், பிதுங்கியிருக்கின்றன" என்றது நாய்.

பிறகு ஓநாய் தாவிப் பாய்ந்து அந்தக் குதிரையின் பிடரி மயிரைக் கவ்வி அதைத் தரையிலே வீழ்த்திக் கடித்துக் குதறியது. ஓநாயும் நாயுமாகச் சேர்ந்து குதிரையின் இறைச்சியைத் தின்றன. ஓநாய் இளையது, விரைவில் அது வயிறு நிறைய உண்டு விட்டது. ஆனால் நாயோ கிழடு, நெடுநேரம் கொறித்ததே அன்றி அதனால் தசையைக் கிழித்து அதிகம் தின்ன முடியவில்லை. அதற்குள் பிற நாய்கள் ஓடி வந்து அதை அங்கிருந்து விரட்டியடித்தன.

நாய் மீண்டும் சாலையிலே செல்லத் தொடங்கியது. பிறகு அது தன்னைப் போலவே கிழடாகி, சுண்டெலியைத் தேடி ஸ்தெப்பியில் அலைந்த ஒரு பூனை தன்னருகே வரக் கண்டது.

"பூனைச் சோதரனே, என்ன சேதி? எங்கே போகிறாய்?" என்று அதை விசாரித்தது.

"சாலை எங்கே செல்கிறதோ அங்கே போய்க் கொண்டிருக்கிறேன். இளம் வயதில் நான் நிறையச் சுண்டெலிகளைப் பிடித்து என் எஜமானனுக்குப் பணி புரிந்து வந்தேன். பிறகு கிழடாகித் தளர்ந்து போய், கண்பார்வையும் மங்கியதும் என் எஜமானன் எனக்குச் சாப்பாடு போடுவதை நிறுத்தி விட்டான். ஆகவே இப்பொழுது நான் இப்படி அலைந்து திரிந்து காலம் ஓட்டி வருகிறேன்."

"பூனைச் சோதரனே, அப்படியானால் நீ என்னுடன் வா, நான் உனக்கு உணவு தேடித் தருகிறேன்" என்றது நாய். ஓநாய் செய்தது போலவே தானும் செய்து பார்ப்பதென்று நாய் தீர்மானித்துக் கொண்டது.

**உக்ரேன்நாட்டு நவரசக் கதை**

ஆகவே நாயும் பூனையும் சேர்ந்து சாலையில் போய்க்கொண்டிருந்தன.

பிறகு ஆட்டு மந்தை ஒன்று மேய்வதைக் கண்ட நாய், "அங்கே மேய்ந்து கொண்டிருப்பவை எப்படிப்பட்ட பிராணிகள் என்று பார்த்துவிட்டு வா" என்று பூனையிடம் சொல்லிற்று.

பூனை அங்கே போய்ப் பார்த்துவிட்டு வேகமாய் ஓடிவந்தது.

"அவை ஆடுகள்" என்றது.

"நாசமாய்ப் போக! அவற்றைப் பிடித்துத் தின்றோமானால் பல் எல்லாம் ரோமம் ஒட்டிக்கொள்ளுமே தவிர, வயிறு நிறையவே நிறையாது. இவை வேண்டாம், இன்னும் போய்ப் பார்ப்போம் வா"

ஆகவே இரண்டும் தொடர்ந்து நடந்தன. பிறகு நாய் அங்கே வாத்துக்கள் திரளாய் இருப்பதைக் கண்டது.

"அங்கே பசுந்தளிர்களிடையே மேயும் அவை என்னவென்று ஓடிப்போய்ப் பார்த்துவிட்டு வா" என்று அது பூனையிடம் சொல்லிற்று.

பூனை அங்கே போய்ப் பார்த்துவிட்டு திரும்பி ஓடிவந்தது.

"அவை வாத்துக்கள்" என்றது.

"நாசமாய்ப் போக! அவற்றைப் பிடித்துத் தின்றோமானால் பல் எல்லாம் இறகுகள் ஒட்டிக்கொள்ளுமே தவிர, வயிறு நிறையவே நிறையாது. இவை வேண்டாம், இன்னும் போய்ப் பார்ப்போம் வா!"

ஆகவே இரண்டும் தொடர்ந்து நடந்தன. நெடுந்தூரம் நடந்தன, இறுதியில் நாய் அங்கே ஒரு குதிரை மேய்வதைக் கண்டது.

"அங்கே புல் மேயும் அந்தப் பிராணி என்னவென்று ஓடிப் போய்ப் பார்த்துவிட்டு வா" என்றது.

பூனை போய்ப் பார்த்துவிட்டுத் திரும்பி ஓடி வந்தது.

"அது ஒரு குதிரை" என்றது.

"சரி, இதைக் கொல்வோம், நமக்கு வேண்டியதற்கும் கூடுதலான உணவு கிடைக்கும்."

உடனே நாய் தரையைப் பிறாண்டியது, பற்களை நறநறவெனக் கடித்துக் கோபத்தை வரவழைத்துக்கொள்ள முயன்றது.

"பூனைச் சோதரனே, எனக்கு வால் துடிக்கிறதா, பார்" என்று அது பூனையிடம் சொல்லிற்று.

"இல்லையே, துடிக்கவில்லையே" என்றது பூனை.

கோபத்தை வரவழைத்துக் கொள்வதற்காக நாய் பலமாய் மீண்டும் தரையைப் பிறாண்டிற்று.

"இப்பொழுது எனக்கு வால் துடிக்கிறதா, என்று சொல்!"

பூனை பார்த்துவிட்டு "ஆம், துளியளவு துடிக்கிறது" என்று சொல்லிற்று.

"நீ பார்த்துக் கொண்டே இரு, விரைவில் அந்தக் குதிரையைச் சாகடிக்கிறேனா இல்லையா பார்!" என்றது நாய்.

மீண்டும் தரையைப் பலமாய் பிறாண்டி

"பூனைச் சோதரனே, என் கண்கள் பிதுங்கி வெளியே வந்திருக்கின்றனவா, பார்" என்று சிறிது நேரத்துக்கு எல்லாம் கேட்டது நாய்.

"இல்லையே, அவை ஒன்றும் பிதுங்கி வெளியே வரவில்லையே" என்று பூனை பதிலளித்தது.

"பொய் சொல்கிறாய்! பிதுங்கி வெளியே வந்துவிட்டன என்றுதான் நீ பதிலளிக்க வேண்டும்."

"அப்படியானால் சரி! நீ சொல்வதுபோலச் சொல்ல எனக்கு ஆட்சேபமில்லை. உன் கண்கள் பிதுங்கித்தான் வெளியே வந்துவிட்டன." என்றது பூனை.

உடனே நாய் கடுங்கோபங்கொண்டு குதிரை மீது பாய்ந்தது. ஆனால் குதிரை பின்னங்கால்களை உதறி நாயின் தலையில் ஒரு உதை விட்டது பார்க்கணுமே! நாய் தூக்கியெறியப்பட்டு தரையிலே போய் விழுந்தது. அதன் விழிகள் பிதுங்கி வெளியே வந்து விட்டன. பூனை அதனிடம் ஓடிச்சென்று பார்த்துவிட்டு-

"ஆகா, நாய்ச் சகோதரனே! இப்பொழுது உன் கண்கள் மெய்யாகவே பிதுங்கி வெளியே வந்துவிட்டன!" என்றது.

> "எவராயினும் தம்மால் முடியாத, தம் ஆற்றலை விஞ்சிய வேலைகளைச் செய்ய முற்பட்டால் அது எதிர் மறையான விளைவுகளையே கொண்டுவரும்"



# விஜயின் வேட்டைக்காரன்

எம்.ஜி.ஆர். படங்களின் பெயர்களுக்கு இன்றும் நல்ல மரியாதை. தனது புதிய படத்திற்கு விஜய் எம்.ஜி.ஆர். படத்தின் பெயரையே தேர்வு செய்துள்ளார். 'வில்லு' படத்தில் நடித்துவரும் விஜய் அடுத்து ஏவி.எம். (பாலசுப்பிரமணியம்) தயாரிக்கும் படத்தில் நடிக்கிறார். தரணியின் அசிஸ்டெண்ட் பாபுசிவன் படத்தை இயக்குகிறார். இந்தப் படத்திற்கு விஜய் தேர்வு செய்திருக்கும் பெயர், 'வேட்டைக்காரன்', எம்.ஜி.ஆரின் அமரத்துவம் வாய்ந்த படங்களில் வேட்டாக்காரனும் ஒன்று.

# ரோபோவுக்கு முன் ஒரு படம்

**ரஜினி முடிவு**

ரோபோவுக்கு முன்பே மீண்டும் ஒரு புதிய படத்தில் ரஜினி நடிக்கப்போகிறார். அதுவும் முழு நீள சண்டை, நகைச்சுவை சரவெடியில் கலக்கப் போகிறார். குசேலன் படம் பல விதங்களில் ரஜினிக்கு மன உளைச்சலையும் அவரது ரசிகர்களுக்கு சங்கடத்தையும் தோற்றுவித்துவிட்டது. இதைச் சரிக்கட்டும் விதத்திலும், தனது பொக்ஸ் ஆபீஸ் பலத்தை இன்னொரு முறை நிரூபித்துக் காட்டவும் இந்த அதிரடிப் படத்தை தர முடிவு செய்துள்ளாராம் ரஜினி. இந்தப் படத்தை இயக்கப் போகிறவர் முருகதாஸ் என்று சொல்லப்பட்டாலும், இன்னும் எதையும் உறுதி செய்யவில்லையாம் ரஜினி. எஸ்.ஜே.சூர்யாவும் கூட ரஜினிக்கு ஒரு அதிரடிக் கதை சொல்லியிருக்கிறார். ரவிக்குமார் இப்போதைக்கு ஜக்குபாய் படத்தை சரத்குமாரை வைத்து எடுப்பதால், அவரும் ரஜினியை இயக்க முடியாத நிலை. எனவே தனது நண்பர்கள் மற்றும் தயாரிப்பாளர்களுடன் ஆலோசனை செய்து வருகிறாராம் ரஜினி. படத்தை பஞ்சு அருணாச்சலம் - சத்யா மூவிஸ் ஆர்.எம் வீரப்பன் இணைந்து தயாரிக்கப்போவது மட்டும் நிச்சயமாகிவிட்டது.

# பிரியாமணியின் பிடிவாதம்





மணிரத்னம் படத்தில் நடிக்க இருக்கும் பிரியாமணி, அவருடைய கேரக்டர் பற்றி கேட்டால் மூச்சுவிட மறுக்கிறார். ஒரு லைன்கூட மீடியாகிட்ட சொல்லக்கூடாது என்பது மணிரத்னத்தின் கட்டளையாம். புதிதாக படம் ஒப்பந்தம் செய்ய வருபவர்களிடம் 'மணிரத்னம் படத்தில் நடிக்கிறேன். அவர் கூப்பிடும் நேரத்தில் அவர் படத்துக்கு சென்று விடுவேன். அதற்கு சம்மதம் என்றால் மற்றதைப் பற்றி பேசலாம்' என்று முதலிலேயே கறாராகச் சொல்லிவிடுகிறார்.




# அடுத்த மாதம் அம்மா



'கார்த்திகை', 'இந்திர விழா', 'தீ' படங்களிலிருந்து விலகிய மாளவிகா, மும்பையில் கணவர் சுமேஷ் மேனனின் வீட்டில் இருக்கிறார். 24 மணிநேரமும் கணவரின் அரவணைப்பில் இருக்கும் மாளவிகாவுக்கு அடுத்த மாதம் குழந்தை பிறக்கும் என்று திகதி கொடுத்திருக்கிறார் டாக்டர். இந்நிலையில், பெங்களூரில் இருக்கும் மாளவிகாவின் பெற்றோர் மும்பை சென்றுள்ளனர்.

# அஜித் பாராட்டும் பியா



ஏகன் படத்தில் அஜித்துடன் இணைந்து நடித்துக் கொண்டிருக்கும் பியா, தமிழ் திரையுலகை ஒரு கலக்கு கலக்குவார் என ஏகன் பட வட்டாரம் தெரிவிக்கிறது. பில்லாவை முடித்த கையோடு அஜித் நடிக்க வந்துள்ள படம் ஏகன். ராஜூ சுந்தரம் இப்படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமாகிறார். படத்தில் அஜித்துக்கு இரு ஜோடிகள். ஒருவர் நயன்தாரா. இன்னொருவர் பியா. கதைப்படி பியாவுக்குத்தான் கனமான வேடமாம். இதைச் சொல்லித்தான் நயன்தாராவிடம் ஒப்புதல் பெற்றுள்ளனர். கவர்ச்சியில் சிறப்பாக இருக்கும் பியா நடிப்பிலும் ஓஹோவென அசத்திக் கொண்டிருக்கிறாராம். ராஜூ சுந்தரம், அஜித் ஆகியோரிடம் நடிப்புக்காக பாராட்டுக்களை வாங்கிக் குவித்துக் கொண்டிருக்கிறாராம். நயன்தாராவுக்கு சரியான போட்டியாக கலக்கிக் கொண்டிருக்கும் பியா, தமிழ் நாயகிகளுக்கும் சரியான சவாலாக இருப்பார் என ஏகன் வட்டாரம் கிசுகிசுக்கிறது.

# சேமிக்கணும் மச்சான்

நாட்டார் கவிதை


பொழுது விடிஞ்சதும் தொழிலுக்காய் புறப்பட்டு
ஒசர மரமேறி பதநீர் இறக்கி வந்து
பக்குவமாய் கொண்டு சேர்த்து-இப்போ
பாக்கு வெத்தல போடும் மச்சான்
சம்பளம் எடுத்தாந்து சட்டைப் பைக்குள்ள வைச்சுப்போட்டு
என்ன செய்யப்போறா எனக்கதைச் சொல்லு மச்சான்

ஆடு வாங்கி வந்து புள்ளே அறுத்துப் பங்கு போட்டு
போத்தலும் ஒண்டெடுத்துக் கொழுந்தனையும் கூட்டிவந்து
குடிச்சு மகிழனும் எண்டு திட்டம் வைச்சிருக்கன் புள்ளே
சம்பளம் வரட்டும் பாரன் சாதிச்சுக் காட்டுறன் கண்ணு...

உழைக்கிற காசை எல்லாம்-உப்பிடி
ஊதாரித்தனமா மச்சான் செலவழிச்சுப்புட்டா
நாளை நம்ம பசங்க நடுத்தெருவிலதான் நிற்கும் மச்சான்
நாலு பணம் உழைச்சாக்கா ரண்டு பணம் சேமிச்சாத்தான்
நாளைக்கு நம்ப பிள்ளைங்க நல்லபடி வாழும் மச்சான்

அரிசி விலை ஏறுதுபுள்ள தேங்காய் விலை எகிறுது புள்ள
சாமான் சட்டு வாங்க வெண்டால்
தான் தாரைய்த் துட்டு வேணும்
உழைக்கிறது போதலைப்புள்ள
சேமிக்கிறது எப்படி முடியும்?

சம்பளம் எடுக்கயில கொஞ்சத்தைச்
சேமிப்பில போடுங்க மச்சான்
பிள்ளைங்க பேரில ஒங்களுக்கு
காப்புறுதி செய்யுங்க மச்சான்
வங்கியில கணக்கைத் திறந்து
பத்துக்காசு போட்டு வைச்சாக்கா
பின்னடிக்கு உதவும் மச்சான்
சீட்டும் நான் கட்டுறனெல்லோ.....



எனிமே என் சம்பளத்தை உன் கையில தந்துப்புடுறன்
என்னமோ செய்புள்ளே -எனக்கு
சோறு மட்டும் தந்துப்புடு...

தே.யோ.துவராஜா
ப.தெ.வ.அ.கூ.ச
கோண்டாவில்

# யாழ் விலைவாசியும்

ஐயகோ!
எந்தன் வீட்டு
அடுப்பங்கரையை
எட்டிப் பாருங்கள்
பற்றி எரிகிறது
அடுப்பல்ல...
வயிறு!
நாடும் தூங்க
நீயும் நானும்
தூங்கிவிட
நடுநிசிதனில்
நாளொருபொழுதாய்
விலையேற்றம்
வாழ்வது எப்படி?
மீள்வது எப்போ?
விரக்தி நித்தமும்
என்னை...
விரட்டுகிறது
தீப்பெட்டிமுதல்
சவப்பெட்டிவரை
விலைவாசியானதால்
செத்துப்போகவும்
முடியவில்லை!



எஸ்.கவிதரன்
சண்டிலிப்பாய்

# முழுநிலவே வாழி!

முழுமதியாய் எம் மனதை முழுதாய் நனைத்த எம் ஆசான்
முதுமொழிகள் பல அறிந்த முழுநிலவே எம் ஆசான்
மணலில் இருக்கும் நுணல்கூட தன்வாயால் கெடும் என்பர்
மதிநுட்ப ஆற்றுகையால் வளம் சேர்ப்பார் எம் ஆசான்
பொழுதெல்லாம் எம் நினைவில் நிறைவோடும்
பொன் சண்முகசுந்தரம் எம் ஆசான் இவர் ஆவார்.

கூட்டுறவாளர் எல்லாம் கூர்ப்படைய வேண்டும் என்று
கூட்டாக இணைந்து குருகுலம் போல் கல்வி சொன்னார்
ஏட்டுப் படிப்புடனே நாட்டுப் படிப்பதனை
நாட்டமுடன் கற்றுத்தந்த எம் ஆசான் இவராவார்

தன் விருப்புடனே தடையில்லாது இணைந்து-கூட்டுறவில்
நன்மதி சுடர் ஒளியாய் எம் ஆசான்
ஜனநாயக ரீதியாக நிர்வாகம் செய்கின்ற
மனக் கட்டுப்பாடுடையோன் எம் ஆசான் வாழியவே!

வல்லை வாசன், அச்சுவேலி

உறுப்பினரின் பொருளாதாரம் உயர்வு பெற வேண்டுமென்று
உழைக்கின்ற நிறுவனங்கள் நிலைத்து நிற்கச் சேவை செய்யும்
உத்தம கூட்டுறவுச் சபையதுவின் செயலாளர்-எம் ஆசான்
கூட்டுறவுக் கல்விதனை வினயமுடன் கற்றுத்தரும்
கூட்டுறவுக் கல்லூரி அதிபராவார்-எம் ஆசான்

சுயாட்சி செய்வதற்கும் சுதந்திரமாய் தொழிற்படவும்
சுயகல்வி பயிற்சியுடன் தகவல்கள் திரட்டிடவும்
கூட்டுறவு சங்கங்கள் கூட்டுறவாய் வாழ்ந்திடவும்
கூட்டுறவு சமூகத்தின் மீதான அக்கறை கொண்டிடவும்

ஆளுமை கொண்டவராய் பணியாளர் வளர்த்திடவும்
ஆக்கத்தை ஒருபோதும் மறவாது இருந்திடவும்
கற்கின்ற பாடமதில் முழுமையாய் தேறிடவும்
கற்றவரின் அறிவுரையால் உயர்வுதனை அடைந்திடவும்
அன்புவழி தவறாது பண்பாக வாழ்ந்திடவும்

அறிவுரைகள் சொல்லி வைத்த எம் ஆசான் வாழியவே!
அகவை அறுபதினை அணைத்திட்ட அறிவொளியே!
அறிவுசால் முழுநிலவே வாழி! வாழி!! வாழியவே!!!

# நட்பு

திறமென்றும் பாராது
அழகென்றும் பாராது
உன்மேல் வைத்த நட்பினால்
கட்டினேன் பல கோட்டைகள்
அன்பென்ற கோட்டையில்
அன்னையும் இருக்க
பாசம் என்ற கோட்டையில்
தந்தையும் இருக்க
மனமென்ற கோட்டையில் -என்நண்பி
நீயும் இருக்க
வாழ்நாள் என்றும் உலகினிலே
அனைவரும் சேர்ந்திருக்க
வள்ளுவன் குறளது போல்
நட்பினில் நாம் இருக்க
வந்தது பிரிவு இன்று
வஞ்சகர் சூழ்ச்சிதன்னால்
பிரிவது நாம்தான் இன்று--ஆனால்
நிலைத்திடும் நட்பு என்றும்

ச.கிரோசிகா
தரம்-9
யா/அச்சுவேலி மத்திய கல்லூரி

# நாங்கள்!

நான் என்ற ஆணவம் ஒழிய வேண்டும்
நாங்கள் என்ற தத்துவம் மேலோங்க வேண்டும்
சுயநலவாதிகள் அழிய வேண்டும்
பொதுநலவாதிகள் வாழவேண்டும்

கல்வியிலே மாணவர் உயர வேண்டும்
கற்றறிந்தோர் தொகை பெருக வேண்டும்
உலகினிலே ஊழல் மறைய வேண்டும்
உலகமதில் உண்மை துலங்க வேண்டும்

ஜாதி மத பேதங்கள் அழிய வேண்டும்
ஏழை, செல்வர் வேற்றுமை ஒழிய வேண்டும்
ஒன்றே குலம் என்று பாட வேண்டும்
ஒருவனே தேவன் என்று போற்ற வேண்டும்

பூமியிலே வளர்ச்சி பெருக வேண்டும்
தலைதூக்கும் வேதனைகள் ஓடவேண்டும்
இன்று முதல் கொடுமைகள் நீங்க வேண்டும்
அன்றுமுதல் புன்னகை மலர வேண்டும்

செல்வி வ.சிவலோஜினி.
முன்பள்ளி ஆசிரியை.
கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.ச.

# நேசிக்கப்படுகின்றனர்

(நே சி க் க ப் ப டு கி ன் ற ன ர்)

மகத்துவம் கொண்ட
மனிதரிடத்தே
பணக்காரர்-ஏழை
படித்தவர்-பாமரர்
உயர்ந்தவர்-தாழ்ந்தவர்
உள்ளவர்-இல்லாதார்
ஏமாற்றுபவர்-ஏமாறுபவர்
அடக்குபவர்-அடங்குபவர்
துன்பப்படுபவரைக் கண்டு
இன்பம் அடைபவர் என
பிரம்மா படைத்ததில்
பிரிவுகள்தான் எத்தனை
அத்தனையினுள்ளும்
அன்புடனும் பண்புடனும்
மற்றவரை அனுசரித்து
மனம் மகிழப் பழகுபவர்
காலத்தால் அழியாது
காலமெல்லாம்
நெஞ்சில் வைத்து
நேசிக்கப்படுகின்றனர்

-மடத்துக்கடவையான்-

நீரிழிவு நோயானது குருதியில் குளுக்கோசின் அளவு உயர்வதால் (High blood Sugar) ஏற்படுகின்ற, முற்றாகக் குணப்படுத்த முடியாத நோயாகும்.

குருதியில் குளுக்கோசின் அளவு உயர்வதற்கு உடலில் இன்சுலின் (Insulin) அளவு குறைவதோ அல்லது இன்சுலின் தொழிற்பாட்டிற்கு எதிர்ப்புத்தன்மை ஏற்படுவதோ அல்லது இரண்டுமோ காரணமாக அமையலாம்.

இலங்கையில் இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களில் நகரப் பகுதியைச் சார்ந்தவர்கள் கூடுதலாகவும் கிராமப் பகுதியைச் சார்ந்தவர்கள் குறைவாகவும் உள்ளனர். யாழ். மாவட்டத்திலும் இந்நோய் குறிப்பிட்ட தொகை மக்களைப் பாதித்துள்ளது. யாழ். போதனா வைத்தியசாலையின் கிளினிக்குகளுக்கு செல்லும் நோயாளிகளில் பெரும்பான்மையினர் நீரிழிவு நோயாளிகளாவர்.

நீரிழிவு நோயானது கண்டுபிடிக்கப்படாதவிடத்து அல்லது சரியான, போதுமான அளவு சிகிச்சை அளிக்கப்படாதவிடத்து பல்வேறு வகையான நோய்ச்சிக்கல்களுக்கு உள்ளாக நேரிடும். இது பல்வேறுவிதமான மீளத் திரும்ப முடியாத குறைபாடுகளுக்கு இட்டுச் செல்கின்றது.

*இந்நோயானது,*

- **இதயம் சம்பந்தமான நோய்.**
- **பாரிச வாதம்.**
- **சிறுநீரகப் பாதிப்பு.**
- **கண்பாதிப்பு.**
- **நரம்பு சம்பந்தமான நோய்.**

போன்ற பல்வேறு பிரச்சினைகள் தோன்றுவதற்குக் காரணமாக அமைகின்றது.

எமது பிரதேசங்களில் இந்நோய் பற்றியதான விழிப்புணர்வு போதுமானதாக இல்லை. அத்தோடு இந்நோயை எவ்வாறு கட்டுப்படுத்தலாம், எவ்வாறு நோய் மேலும் மோசமடையாமல் தடுக்கலாம் என்பன பற்றிய அறிவு மிகக்குறைவாகவே காணப்படுகின்றது. அத்துடன், ஆளணிப் பற்றாக்குறை, நீண்டு செல்லும் தொடர் யுத்தம் போன்றன எமது பிரதேசங்களில் இந்நோயைக் கட்டுப்படுத்தும் தன்மையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

**இந்நோயின் அறிகுறிகள்,**

1. அதிக தாகம்.
2. அடிக்கடி சிறுநீர் கழித்தல்.




3. இரவில் அடிக்கடி சிறுநீர் கழித்தல்.
4. உடல் நிறை குறைதல்.
5. உடற் களைப்பு.
6. தசைகளில் பிடிப்பு ஏற்படல்.
7. கண்பார்வை குறைதல்.
8. பக்றீரியா கிருமித் தாக்கம்.

நீரிழிவு நோயை நிர்ணயம் செய்வதற்கு குருதித் திரவத்திலுள்ள குளுக்கோசின் அளவு அல்லது சிறுநீர் பற்றிய முழுமையான அறிக்கை மூலம் பரிசோதனை செய்யப்பட்டு கண்டறியப்படுகிறது. நீரிழிவு நோயும் அதனால் உருவாகும் மோசமான விளைவுகளையும் தவிர்க்க நீரிழிவு நோயை கட்டுப்பாட்டில் வைத்திருப்பது மிக முக்கியமானதாகும். அந்த வகையில்,

1. **உணவுக்கட்டுப்பாடு.**
2. **ஒழுங்கான உடற்பயிற்சி.**
3. **மதுபான வகைகள் பாவித்தலைக் குறைத்தல்.**
4. **புகைப்பிடித்தலைத் தவிர்த்தல்.**

என்பவற்றை எல்லா மக்களும் கடைப்பிடித்தால் நீரிழிவு நோய் உருவாவதை ஓரளவிற்கு குறைக்க முடியும்.

**நீரிழிவு நோயாளி தவிர்க்க வேண்டிய உணவு வகைகள்**

- சீனி, தேன், சர்க்கரை, ஜாம்.
- இனிப்பு வகைகள்.
- தவிடு நீக்கிய தானிய வகைகள்.
- கொழுப்பு உணவுகள்.
- அதிக கலோரி கொண்ட பழ வகைகள்.
- கிழங்கு வகைகள்.
- குளிர்பானங்கள்.
- பருப்பு வகைகள்.
- பொரித்த உணவுகள்.

தொகுப்பு: க.ப.லோகநாதன்
கல்வி உத்தியோகத்தர்.
சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ.ச.

**நீரிழிவு நோயாளி சராசரியாக உண்ணக்கூடிய உணவுகள்**

- தானியங்கள் மற்றும் கடலை வகைகள்.
- காய்கறிகள்-பச்சை பீற்றூட், கரட், வாழைக்காய்.
- பழவகைகள்-தோடம்பழம், பப்பாசி, அப்பிள், வாழைப்பழம் (கதலி), கொய்யாப்பழம் (சிறிதளவு).
- ஆடைநீக்காத முழுபால்/ பால்மா உணவுகள்
- மீன், கோழி இறைச்சி.ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி.
- முட்டை-முட்டை வெள்ளைக்கரு தாராளமாக உண்ணலாம்.
- தேங்காய் எண்ணெய்/சூரியகாந்தி எண்ணெய்.

**நீரிழிவு நோயாளி அடிக்கடி உண்ணக்கூடிய உணவு வகைகள்**

- தேநீர்/கோப்பி (சீனி, பால் அற்றது)
- தக்காளி/தேசிக்காய் பழச்சாறு (சீனி அற்ற)
- இரசம், பிளேன் சோடா/மோர்
- பச்சை காய்கறி வகைகள்-பொன்னாங்காணி, போஞ்சி, புடோல், பயற்றங்காய், கீரை வகை, பாகற்காய், இலைக்கோவா, லீக்ஸ், வெண்டக்காய், முருங்கை இலை, சிறுகுறிஞ்சா இலை, வல்லாரை, பசளி, வெள்ளரிக்காய்.
- பச்சை காய்கறிகள், இலை வகை மூலம் தயாரிக்கப்பட்ட சூப்.

எனவே இவற்றை விளங்கிக் கொண்டு சரியான முறையில் பின்பற்றுவதன் மூலம் நீரிழிவு நோயுடனும் நலமாக வாழமுடியும்.

## உலோக நாணயங்களின் தோற்றம்

உலோக நாணயங்களின் தோற்றம் மெசபெத்தேமியா மற்றும் எகிப்திய நாகரிகப் பிரதேசத்திலிருந்தே தோன்றியது. கி.மு.3000ம் ஆண்டளவில்தான் நாணயமுறை நடைமுறைக்கு வந்தது. இங்குள்ள மக்கள் "பணம்" உருவாகுவதற்கு முன்பு ஆரம்ப பரிமாற்றப் பொருளாக தங்கத்தையும் வெள்ளியையும் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட நிறை அலகு முறையையே கைக்கொண்டனர். இவற்றின் பெறுமதியானது அதன் வெளித் தோற்றத்தைக் கொண்டு நிர்ணயிக்கப்படவில்லை. மாறாக அதன் நிறை மற்றும் தொகை அளவைக் கொண்டே நிர்ணயிக்கப்பட்டது.

## மாவட்ட மட்டப் பயிற்சி

எதிர்வரும் மாதத்தில் சமாசத்தின் கல்விச் செயற்பாட்டின் கீழ் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினால் நடத்தப்படும் முன்கல்வி ஆசிரியருக்கான சிறப்புப் பயிற்சிநெறி சமாச மண்டபத்தில் நடத்த சமாசம் ஒழுங்குகளைச் செய்து வருகிறது. பயிற்சி திகதி விரைவில் உரியவர்களுக்கு அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது..

## வாணி விழா

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் வாணி விழாவினை கடந்த 8ம் திகதி வெகு சிறப்பாக சமாச மண்டபத்தில் கொண்டாடியது. இவ்விழாவில் சமாச தலைவர் சி.சந்திரலிங்கம், நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் சமாசப் பணியாளர்களும் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

# கற்பகம்தரும் பரிசளிப்பு, கௌரவிப்பு விழா நிகழ்வின் நிழல்கள்!











இதோ! இப்போது வெளியாகின்றது!

## 2009ம் ஆண்டுக்கான அழகிய வாக்கிய பஞ்சாங்க நாட்காட்டிகள்!



12 மாதங்களுக்கும் தனித்தனி தாள்களைக் கொண்டு (A3 அளவு) அழகிய முறையில் அச்சிடப்பட்ட வாக்கிய பஞ்சாங்க நாட்காட்டிகள் வெளியிடப்படவுள்ளன. நீங்களும் உங்கள் நிறுவனங்களின் விளம்பரங்களை நாட்காட்டியில் அழகிய முறையில் அச்சிட்டுப் பெற்றுக்கொள்ள விரும்பின் உடனே நாடுங்கள்!

**இவற்றுடன் ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வு நூல்கள், நினைவு மலர்கள், பிற நூல்கள், சஞ்சிகைகள் என்பவற்றை கணினியில் வடிவமைத்து, அவற்றை ஓவ்(f) செற் மூலம் அழகிய (வர்ண, கறுப்பு-வெள்ளை) முறையில் குறைந்த செலவில் விரைவாக அச்சிட்டுப் பெற்றுக்கொள்வதற்கும் நாடவேண்டிய இடம்,**

**வடமாகாண ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் சமாசப் பதிப்பகம்**

499, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்
தொ.பேசி, பக்ஸ்: 021 222 5072


இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு இல.52, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2008ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வெளியிடப்பட்டது.